**OS.No.463/2024, Dated 25.08.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 25th day of August 2025.

**பி.வா.சா.1 – ஆறுமுகம த/பெ. வேணு கவுண்டர் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு பூர்வீகம் மேல்பாதி கிராமம் தான். எனக்கு எழுத படிக்க தெரியாது. எனக்கு ஆவணங்கள் குறித்த விபரங்கள் ஓரளவிற்கு தெரியுமா என்றால் தெரியும். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஒன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. எனக்கு மாதம் சுமார் ரூ.6000/- வருமானம் வரும். அதை தவிற எனக்கு வேறு வருமானங்கள் இல்லை. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அடமானத்திற்கு முன்பே எனக்கும் வாதிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. 14.09.2015 அன்று தாவா சொத்தை வாதிக்கு அடமானம் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அடமானத்திற்கான ஆவண எழுத்தரை நான் தான் அழைத்து வந்தேன் என்றால் சரிதான். அந்த அடமானத்தில் சவுந்தரராஜன் மற்றும் தேவேந்திரன் ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். அவர்கள் இருவரும் என்னுடைய நண்பர்கள் என்றால் சரிதான். சவுந்தரராஜனுக்கும் வாதியின் தாயாருக்குமிடையே 2020ம் வருடத்திலிருந்து சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு அது தெரியாது. நான் இரண்டு பைசா வட்டிக்கு தான் கடன் வாங்கினேன். நான் ரூ.1,00,000/-வரை வட்டியாக வாதியின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளேன். நான் வட்டி செலுத்தியதற்கான ஆவணங்கள் எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2015 ஆண்டு 9 வது மாதத்திலிருந்து 10 மாதங்கள் நான் வட்டி கொடுத்து வந்தேன். மாதம் ரூ.5000/- நான் வட்டி செலுத்தி வந்தேன். அடமானம் போடும்போது அந்த பணத்தை வாதி என்னிடம் கொடுத்தாரா என்றால் சவுந்தராஜன் தான் கொடுத்தார். அவ்வாறு அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவர் தான் முன்னின்று

வாங்கி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அவர் ரூ.1,50,000/-ம் தான் வாங்கி கொடுத்தார். ஆனால் மோசடியாக ரூ.2,00,000/- என்று ஆவணத்தில் எழுதிவிட்டார்கள். அந்த அடமான ஆவணத்தை எனக்கு படித்து காண்பித்தார்கள். அதன்பின்னிட்டு தான் நான் கையொப்பம் போட்டேன். சவுந்தரராஜன் அந்த பணத்தை வாங்கி கொடுப்பதாக என்னிடம் கூறினார். நான் நம்பிக்கையின் அடிப்படையில் கையொப்பம் போட்டேன். மோசடியாக எழுதி வாங்கினார் என்று நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வட்டி அதிகமாக வாங்குகிறார்கள் என்று இணையதளம் மூலமாக நான் காவல் துறையில் புகார் அளித்தேன். அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த பத்து மாதத்திற்கு பின்னிட்டு நான் வட்டி எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் 2022ம் ஆண்டு பணத்தை எடுத்து சென்று வாதி வீட்டில் அவருடைய தாய் மாமா முன்னிலையில் நான் வட்டியையும், முதலையும் பைசல் செய்துவிட்டேன். 12.02.2022 அன்று நான் பணத்தை பைசல் செய்தேன். அந்த பணத்தை நான் சவுந்தரராஜன் முன்னிலையில் தான் கொடுத்தேன். அன்றைய தினம் ரூ.1,00,000/- பைசல் செய்தேன். அதற்கு முன்பே நான் ரூ.1,00,000/- கொடுத்துவிட்டேன். அது சம்பந்தமாக நான் வாதியிடம் பைசல் இரசீது பெற்றேனா என்றால் இல்லை. நம்பிக்கையில் பேரில் தான் பைசல் செய்தேன். நான் பணத்தை பைசல் செய்துவிட்டேன் என்றும், அடமானத்தை இரத்து செய்ய வேண்டும் என்றும், நான் அறிவிப்பு எதாவது அனுப்பினேனா என்றால் இல்லை. பணம் கொடுத்து இரண்டு வருடங்கள் கழித்து தான் சவுந்தரராஜன் நான் பணம் பைசல் செய்ததற்கு ஆவணம் எழுதி கொடுத்தார். சவுந்தரராஜனுக்கும், வாதிக்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனையில பேச்சு வார்த்தை இல்லை என்றால் எனக்கு அது தெரியாது. 08.02.2016 அன்று நான் வட்டி செலுத்தவில்லை என்று வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால்

சரிதான். எனக்கு மாத வருமானமே ரூ.5000/-ம் தான் என்பதால் நான் வட்டி எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கும், சவுந்தரராஜனுக்கும் உள்ள விரோதத்தை பயன்படுத்தி பொய்யான ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் ரூ.2,00,000/- பணம் வாங்காமல் இருந்திருந்தால் அப்போதே நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், அதனால் தான் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சவுந்தரராஜன் தான் பேசி முடித்து கொடுப்பதாக என்னிடம் கூறி வந்தார். ரூ.1,00,000/- பணத்தை நான் வாதியின் வீட்டில் சவுந்தரராஜனிடம் கொடுத்து வாதியிடம் கொடுக்க செய்தேன். நான் கொளத்தூரில் சென்று கொடுத்தேன். வாதியின் தாய் மாமா அழைத்து சென்றார். எனக்கு முகவரி குறிப்பாக தெரியவில்லை. வாதியிடம் ரூ.2,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய அடமானத்தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.08.25 18:43:14 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்